ஆஸாத்

11.12.50

~~13-11-50~~

AZAD

THE ONLY POLITICAL TAMIL FORTNIGHTLY
KUMBAKONAM

FOUNDER: HAJEE - M. ABDUR RAHMAN SAHIB

EDITOR: MAULANA ABDUL HAKEEM

குறைந்த விலையில் அழகிய ஆடைகள்

Truthful
READY MADE CLOTHES

"ட்ரூத்புல்" ஆடைகளே!

எங்கள் எம்பிராய்டரி வேலைப்பாடுகள்
ஒரு தனி ரகம்
சகோதர சகோதரிகள் யாவரும் ஒரு முறை
வாங்கி அணிந்து ஆனந்தம் அடைய
வேண்டுகிறோம்
இந்தியாவெங்கும் ஒரே விலைக்கு
விற்கப்படுகிறது.

தயாரிப்பவர்கள்,
தி ட்ரூத்புல் மனுபாக்சரிங்
கம்பெனி லிமிடெட், மதுரை.

ஆஸாத் தமிழ் பத்திரிகை

தனிப்பிரதி அணா 2

அறிக்கை.

ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா (24 பிரதிகளுக்கு) ரூ. 3,

(ரூபாய் மூன்று மட்டும்)

இதுவரையில் அனுப்பாமலிருக்கும் அன்பர்கள்
மணியார்டர் மூலம் அனுப்பி ஆதரிக்க
வேண்டுகிறோம்.

*

மானேஜர் - "ஆஸாத்" - கும்பகோணம்.

'AZAD' NATIONAL TAMIL BI-MONTHLY KUMBAKONAM.

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறை பத்திரிகை கும்பகோணம்.

மலர் 3 | விக்ருதுஇல கார்த்திகைமீ 26உ (11-12-1950) ஹிஜ்ரி 1370 ரபிஉல் அவ்வல்மீ 1உ திங்கட்கிழமை | இதழ் 10

CONNEMARA PUBLIC LIBRARY
29 MAY 1955
MADRAS

சோவியத் ரஷ்ய சிற்பி

(மார்ஷல் ஸ்டாலின்)

ஜார்ஜியா மலைகளுக்கிடையே கோவுரி என்னும் நகரில் 25-டிசம்பர் 1879ல் ஸ்டாலின் பிறந்தார். பெற்றோர் அவருக்கு ஜோஸம் வஸாரிவியோ விஹோவி என்ற பெயரிட்டனர்.

ஸ்டாலின் சொந்த பெயர் ஸ்டாலினல்ல. இப பெயரால் அவர் சகாக்கள் அழைக்கின்றனர். ஆனால் இன்று அகில உலகிலும் இதே பெயர் பிராபல்ய மடைந்துவிட்டது. ஸ்டாலின் (Stalin) என்ற பதம் "இரும்பு மனிதன்" என்று பொருள் படும். ஸ்டாலினின் தந்தையைப்பற்றி பெரும்பாலும் ஜீவிய சரித்திரங்களில் பிரஸ்தாபமே காணவில்லை. அவர் கோவுரி நகரின் ஒரு சாதாரண ஏழைச்சக்கிலியராவர். மது அருந்துவதில் அவருக்கு அளவுகடந்த மோகம், தாயும் ஓர் ஏழைக் குடும்பத்திலுதித்தவளே. கிருஸ்துவ மார்க்கத்தில் அதிக பக்திகொண்டவள். மதாச்சாரங்களில் அவள் கொண்டிருந்த அளவுகடந்த பிரேமையால் தன் மகனும் ஒருபாதிரியாகவேண்டும் என்று விரும்பிவந்தாள். ஆகவே ஆரம்ப மதபோதனை பாடசாலையில் தன் மகனையும் சேர்த்துவிட்டாள். ஆரம்ப கல்விகற்றபின் ஜார்ஜியாவின் தலைநகரமான மான்திப்பிலியில் ஓர் உயர்தர மதாசார பாடசாலைக்கனுப்பினாள். தன் செல்வப் புதல்வனும் மதக்கலையில் வல்லவனாகவேண்டும் என பேரவாகொண்டிருந்ததாயிடம் தான் கொண்டிருந்த அன்பினால், மதத்திடம் வெறுப்புணர்ச்சி கொண்டபின்பும் ஐந்து ஆண்டுகள் வரை மதக்கல்வியை கற்றுவந்தார் ஸ்டாலின். முடிவில் 29-மே 1899-ல் சுமார் இருபதாம் பிராயத்தில் ஸ்டாலின் மதக் கலாசாலையை விட்டு வெளியேறினார். அவருக்கு சோவியத் பாஷை தவிர உலகத்தின் எந்தபாஷையும் தெரியாது

கலாசாலையை விட்டு வெளி யேறியதும், தம் அறிவு, ஆற்றல், முழுவதையும் அரசியல் துறையில் செலுத்த முற்பட்டார். போல்ஷ்விக் ஸ்தாபன அங்கத்தினரைச் சேர்ப்பதும், மன்னர் ஜாரை எதிர்த்து வேலை நிறுத்தங்களை தூண்டவும் தம் சக்தி முழுவதையும் செலவிடலானார். பொருளாதார சிக்கல் தோன்றும் சமயங்களில் ஸ்டாலினும் அவர் சகாக்களும் பாங்குகளில் கொள்ளையிட்டு தம் தேவைகளைப் பூர்த்தி செய்வர். ஒரு முறை போலீசாரிடம் சிக்கிய ஸ்டாலின் சைபீரியாவுக்கு நாடு கடத்தப் பட்டார். ஆனால் அங்கிருந்து எப்படியோ தப்பியோடிய ஸ்டாலின் காகேஷிய மலைகளையடைந்து, போல்ஷ்விக் கட்சியொன்றை ஸ்தாபித்து அதற்கு தலைவரானார்.

ஸ்டாலின் சாதாரணமாய் குட்டையானவர் என்றே கூறலாம். 5-அடி 5- அங்குல உயரமேகொண்டவர். அகன்ற மார்பும் வெளியில் தள்ளிய தோள்களும் உடையவர். இடது கையை விட வலது கை சற்று சிறியது. வாலிபப் பருவத்தில் அடர்ந்து கறுமையாய் வளர்ந்திருந்த கேசம் இன்று வயது முதிர்ச்சியால் வெண்மை நிறம் கொண்டு காணப்படுகிறது.. குறுகியதும் பின்புறம் சாய்ந்த மேனியுமுடையவர் முகத்தில் மட்டும் வெளிப்படும் சிறிய பற்கள் கொண்டவர். இன்று அவை அநேகமாய் தங்கமுலாம் பூசியே காணப்படுகின்றன. மூக்கு அகலமாயும் நீளமாயும் இருக்கும். குறும்புப் பார்வை கொண்ட குறு குறுப்பான கண்கள் அவற்றின் மேல் பலத்த இமைகள். பார்வையோ வேட்டைக்காரர் வேட்டையைத் தேடுகையில் மேற் கொள்ளும் விதமானது.

ஸ்டாலின் தலைமையின் கீழ் போல்ஷ்விக்ஸ் தாபன் நாளொருமேனியாய் வளர்வதை ஜார்மன்னரின் ரகசிய இலாக்காவும் உன்னிப்பாய் கவனித்து வந்தது. அக்கண்காணிப்பின் பயனாய் 1913-முதல் 1917-வரை ஸ்டாலின் ஸைபீரியாவின் பனிநிறைந்த பிரதேசத்தில், தனிவாழ்க்கை நடத்த வேண்டியதாயிற்று. இளவரசர் லாபோபும் அலெக்ஸாண்டர் கிரின்ஸ்கியும் சேர்ந்து இரண்டாம் நிகோலஸ் மன்னரைப் பட்டத்தினின்றும் துறத்தியபோது ஸ்டாலினுக்கும் ஸைபீரியாவினின்றும் விடுதலை கிடைத்தது.

ஸ்விட்ஜர்லாந்துனின்று திரும்பிதலைநகரைநோக்கி விரைந்துசென்ற லெனின் முடியாட்சிக்குப் பதில் குடியாட்சி அமைக்கப்படவேண்டும் என்று கோரிய போது, ஸ்டாலின் அவருடன் பூரணமாய் ஒத்துழைத்தார் போராட்டகாலம் அனைத்திலும் அவர் லெனினுடன் ஒத்துழைத்தே வந்தார்.

ஆரம்பமுதலே லெனின் ஸ்டாலினிடம் நல்லெண்ணம் கொண்டிருக்கவில்லை. ஆகவே தனக்கு வாரிசாய் ஒருவரை நியமிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது ஸ்டாலினை வேறொரு முக்கிய பதவியில் அமர்த்திவிட்டு ட்ராட்ஸ்கியை தன் வாரிஸாய் நியமித்தார். ஸ்டாலின் அதை வரவேற்கவில்லை ட்ராட்ஸ்கியைப்போல் பிரசங்க நிபுணர் அல்லாவிடினும், ஜேமூனுபோவைப் போல் நிர்மாண நிபுணத்வம் பெற்றிருக்கவில்லையாயினும் அவர் 7-நவம்பர் 1917-க்குள் ரஷ்ய தேசத்தின் மாபெரும் சக்திவாய்ந்த ஸ்தாபனமாய் போல்ஷ்விக் கட்சியை வளர்த்தார். இக்கட்சி ஸ்டாலினையே தலைவராய்க்கொண்டது; அவர் உத்தரவுகளை மறுப்பின்றி நிறைவேற்றியது. கடைசியில் 24-ஜன 1924-ல் லெனின் மரணமடைந்ததும் நாட்டின் நிர்வாகப் பொறுப்பை மேற்கொள்வதில் ஸ்டாலினுக்கு எவ்வித எதிர்ப்பும் இருக்கவில்லை.

இன்று ஸ்டாலின் பெயரைக்கொண்ட பதினோரு நகரங்கள் ரஷ்யாவில் உள்ளன. அந்நாட்டு களஞ்சியமாய் ஸ்டாலின் வழங்குகிறது. ஐந்தாண்டு திட்டம் ஒன்று ஸ்டாலின் திட்டம் என பெயரிடப்பட்டுள்ளது. அந்நாட்டுயுகம் (Era) ஸ்டாலின் யுகமாகும். தேசத்தார் அவருக்கு முதலில் மார்ஷல் என்றும் பிறகு ஜனரலிஸ்ஸிமோ வென்ற பட்டம் சூட்டினர்.

எண்ணிறந்த ஸ்டாலின் சிலைகள் இன்று ரஷ்ய நாட்டின் பற்பல பாகங்களிலும் நடப்பட்டுள்ளன. ஸ்டாலின் இரு கல்யாணங்கள் செய்தார். முதல்மனைவிக்கு ஜோகப் என்ற மகனும் இரண்டாம் மனைவிக்கு விஸ்லி என்ற மகனும் (தற்பொழுது ரஷிய விமானப் படையில் சேவைசெய்துவருகிறார்) இப்பொழுது சுமார் இருபதாம் பிராயம் அடைந்துள்ள ஸ்டெல்லா என்ற குமாரத்தியும் உள்ளனர்.

ஸ்டாலின் அதிகம்பேசாதவரும், சுலபமாய் அறிய முடியாதவருமாவர் மௌனமாயிருப்பதை அவர் அதிகம் விரும்புகிறார் அதிக நேரத்தை சிந்திப்பதில் செலவிடுகிறார். கேளிக்கைகளில் பிரியமற்றவர் தனக்குக் கீழுள்ள உத்தியோகஸ்தர்கள், நாட்டு மக்கள் முதலியவரை விட்டு விலகியிருக்கவே விரும்புகிறார். பெரும்பாலும் தலை நகரத்தை விட்டு வெகுதூரம் நிம்மதியான ஓரிடத்தில் வசித்து வருகிறார் கிரிம்லின் சபையோடு டெலிபோன் மூலமே சம்பாஷணைகள் நடத்துகிறார்.

திபேத்

இருபதாம் நூற்றாண்டில் கண்டறியாத பழமை.

நாகரீகம், விஞ்ஞானமும் முதிர்ச்சி பெற்ற இந்நவீன காலத்திலும், இப்பூலோகத்தில் அமைந்திருப்பினும் உலகினரால் அண்டவும் முடியாத சில நிலப்பரப்புக்கள் இருப்பது வியக்கத்தக்கதே. திபெத்தும் அவற்றில் ஒன்று. கடக்கமுடியாத இமயமலைத் தொடர்களுக்கப்பால் அமைந்துள்ள திபெத் பல நூற்றாண்டுகளாக அந்நியர் நுழையமாட்டாத பிரதேசமாய்த் திகழ்கிறது. ஆகவே வானத்தை அளாவும் இமய சிகரங்களுக்கப்பால் எவ்விதநிலைமை நிலவுகிறது என்பதை உலகம் பூரணமாய் அறிய இயலவில்லை. ஒருவேளை அந்நாட்டில் நிலைமை பிரதேசத்தினர் அறியமுடியாதபடி இயற்கைச் சக்தி தடுக்கிறதோ? மேலும் அந்நாட்டினரும் அந்நியர் தங்கள் நாட்டில் பிரவேசிப்பதையோ, அவர்கள் நிலைமையை அறிந்துகொள்வதையோ விரும்பவில்லை. அவர்களுக்கு சாதகமாக இமயமலையை இயற்கை அன்னை சிருஷ்டித்துள்ளது போலும்.

மேல்நாட்டினர் பலர் அந்நாட்டில் சென்று அங்குள்ள நிலைமையை அறிய பன்முறைமுயன்றனர். ஆனால் ஒரு சிலரே அதில் வெற்றிபெற்றனர். குறிப்பாக புண்ணிய நகரமென கொண்டாடப்படும் விஹாஸா செல்லும் சந்தர்ப்பம் மிக அரிது.

அத்தகைய பெருமை கிட்டிய பாக்கியவான்களில் சமீபத்தில் திபெத்தில் சுற்றுப்பிரயாணம்செய்து திரும்பிய லாயல்டாமஸ் என்பவரும் ஒருவர். திபெத்திய புனித தலைவர் டலாய்லாமாவைச் சந்திக்கும் சந்தர்ப்பமும் அவருக்குக்கிடைத்தது. ஆகவே அவர் தமது திபெத்திய சுற்றுப்பிரயாணத்தைப்பற்றி எழுதியுள்ள விஷயங்கள் மனதைக் கவரக்கூடியவை. அவர் எழுதுகிறார் :—

திபெத்திய பீடபூமி சிலவிடங்களில் கடல் மட்டத்தினின்றும் 14-ஆயிரமும், சிலவிடங்களில் 18ஆயிரம் அடி உயரத்தில், நான்கு பக்கங்களிலும் அடர்ந்த காடுகளாலும், உயரமான பனி படிந்த மலைச்சிகரங்களாலும் சூழப்பட்டிருக்கிறது. சில மலைகள் சுமார் ஐந்து மைல் உயரம் கொண்டவை. நாற்பது லட்சம் மக்களைக் கொண்ட இத்தேசம் இரண்டு லட்சம் புத்தபிட்சுக்களின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. தமது நிர்வாகத்தில் அந்நியரின் எத்தகைய தலையீட்டையும் அவர்கள் விரும்பவில்லை. இந்தியாவினின்று மிக சமீப வழியிலும் விகாஸா போய்ச்சேர நான்கு வாரகாலம் பிடிக்கும். திபெத் விஸ்தீரணத்தில் அமெரிக்காவின் மூன்றில் ஒரு பங்குகொண்டது. இவ்வளவு பரந்த தேசத்தில் ஆஸ்பத்திரி, ரயில் பத்திரிகை, தண்ணீர்க் குழாய், மின்சாரம் முதலியன அறவே இல்லை என்பதைக் கேட்க

நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். மோட்டார் ஒருபுறமிருக்கட்டும்; இந் நாட்டில் சாமான் போக்குவரத்திற்கு சக்கரவண்டிகளே இல்லை. விஞ்ஞானவாடையும் இங்கு எட்டவில்லை என்றால் முழுதும் உண்மையே. புராதன நாகரீகத்தை இங்குள்ளமக்கள் கொண்டுள்ளனர். அதை இம்மியளவு மாற்றவும் அவர்கள் விரும்பவில்லை. இங்கு மலைகளின் உச்சிகளின்மீது பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. கல்வியறிவு அறவே யில்லாத இந்நாட்டில் சிற்பக் கலைக்கே களஞ்சியமென கூறத்தக்க அவ்வாலயங்களைக் கண்டால் நமக்கு வியப்பே உண்டாகிறது. இங்கு அச்சாலையே இல்லாததால் மதாச்சார நூல்கள் கைப்பிரதிகளாகவே தயாராக்குகின்றனர். நாட்டியம், சங்கீதம் ஆகிய கலைகள் மிகவும் போற்றப்படுகின்றன. ஆனால் அவை மதஆர்வம் மிகுதியாகவே யிருக்கின்றன! நாம் திபெத் பிரயாணத்தை இந்திய எல்லையில் சிக்கிம் சமஸ்தானத்திலுள்ள குங்டோக் என்ற விடத்திலிருந்து ஆரம்பித்தோம். நம் அத்யாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல ஆறு கூலியாட்கள், ஒன்பது கோவேறு கழுதைகள், உணவு தயாரிக்க ஒருவனும் துவிபாஷி ஒருவனும் நம்முடனிருந்தனர்.

நாம் மெதுவாக முன்னேறிச் செல்லவேண்டியிருந்தது. இந்திய எல்லையையும், இமயமலையின் பனி படர்ந்த சிகரங்களையும் தாண்டி திபெத்தின் எல்லையில் காலடி வைத்தபோது சமுத்திர மட்டத்திலிருந்து 14800 அடி உயரத்திலிருந்தோம். உடனே குல்லாய்களைக் கைகளிலேந்தி அப்புனித நாட்டுக்கு வந்தனம் கூறினோம். ஏனெனில் சட்டப்படி ஒவ்வொரு பிரயாணியும் முதலில் திபெத் நாட்டை வணங்கியே உள்ளே நுழையவேண்டும். பெருங் கூச்சல்போட்டு கற்களை எடுத்து நாற்புறமும் வீச நமக்கு உத்திரவிடப்பட்டது. அதனால் துர்தேவதைகள் நம்மை பின்தொடர முடியாது ஓடிப்போகும் என்று திபெத்திய மக்கள் நம்புகின்றனர். எல்லையில் பிரவேசித்ததும் தேக்குக் காடுகளைக் கடக்கவேண்டியதாயிற்று. இவ்விடத்திலேயே நாம் திபெத் வானரம் கண்டோம். உடல் முழுதும் பனிக்கட்டிபோல் வெள்ளையாயும் முகம்மட்டும் கறுப்பாயும்கொண்ட இக் குரங்கின் வால் மிக நீளமானது. திபெத்தை பிராணிகளின் சுவர்க்கம் என்றே கூறவேண்டும். ஏனெனில் திபெத்தியர் புத்தமதத்தினராகையால் பிராணிகளைக் கொல்லவோ இம்சிக்கவோ மாட்டார்கள். பிட்சுக்கள் கோடையில் ஆலயங்களைவிட்டு வெளிவந்தால் மரத்தடியில் எறும்புகள் போன்ற சிறு பூச்சிகள் சிக்கி ஹிம்சைபடும் என்று கருதி வெளியே வருவதேஇல்லை. ஆனால் குளிர்காலத்தில் மாமிசம் உட்கொள்ளாமலிருக்க முடியாது. ஆகவே மிருகங்களை முதலில் பூஜித்து கொன்று புசிக்கின்றனர். அப்படி பூஜிப்பதால் அம்மிருகங்கள் மறுஜென்ம மெடுக்கையில் நல்ல ஜென்ம மெடுக்கும் என்று அவர்கள் நம்புகின்றனர். யாடோங் நகரம் போய்ச்சேர்ந்ததும் லோகல் ஏஜெண்டு டோமோட்ரோசி என்பவரிடம் சென்று அனுமதிச்சீட்டு (பாஸ்போர்ட்) பெற்றுக்கொண்டோம் அவர் நீலவர்ணத்தில் ஒரு நீண்ட அங்கியை அணிந்து அதன்மீது சிகப்பு இடுப்புப் பட்டையொன்று கட்டித் தலைமயிரை உச்சிக்கொண்டையாய் முடிந்து, மரகதம், முத்துக்கள் கோர்த்த நீண்ட காதணி (லோலாக்கு) அணிந்திருந்தார். நான் கைலாகு கொடுக்க கையை நீட்டினேன். அவர் ஒரு பட்டுத் துண்டால் என் கையை மூடினார். உடனே நானும் ஒரு கைத்துண்டால் அவர் கரத்தை மூடிவிட்டேன். இதுவே அந்நாட்டில் கைலாகு கொடுப்பதற்குப் பதில் முறையாகும். யாடோங்கைவிட்டு முன்னேறியதும் நீரும் நிழலுமற்ற ஒரு வனாந்தரத்தைக் கடக்க வேண்டியதாயிற்று. யாக் என்னும் திபெத்திய எருமையை அங்குதான் முதன்முதல் கண்டேன். மிக எளிதில் பழகிக்கொள்ளும் இயல்புடையது. சாமான் போக்குவரத்திற்கு பெரிதும் உபயோகப்படுகிறது. எருமைகள் பாலும் கறக்கின்றன. அதிக வெண்ணெய்ச் சத்து கொண்டதாகையால் நெய் அதிகம் சேகரிக்கப்படுகிறது. யாக் மாமிசம் நல்ல உணவாகும். அதன் கம்பளியால் ஆடை வகைகளும், கூடாரங்களும் செய்யப்படுகின்றன. நீண்ட மயிரால் கயிறு திரிக்கிறார்கள கொம்புகளும், எலும்புகளும் கட்டிடங்கள் கட்ட உபயோகப்படுகின்றன. தோலினால் பல பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆகவே எல்லாவித்திலும் பயன்படும் யாக்கை திபெத்தியர் போற்றி வளர்க்கின்றனர் அதன் வால் முக்கியமாய் அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறது. அதனால் போலி தாடி மீசை முதலியவை தயாரிக்கப்படுகின்றன. இந்நாட்டில் விறகு முதலிய எரிபொருள் கிடைப்பது அரிதாகையால் யாக் சாணத்தை விறட்டியாய்த் தட்டி எரிக்கிறார்கள். நிலத்தை உழுவதற்கும் யாக் உபயோகிக்கப்படுகிறது. திபெத்தியர் நிலங்களை நேராய் உழாமல் கோணலாய் உழுகிறார்கள் அப்படிச் செய்வதால் துர்தேவதைகள் தம்மைத் தொடரமாட்டா, பயிரும் செழித்து வளரும் என்று நம்புகின்றனர். நான்கு புறத்திலும் உயர்ந்த மலைகளால் சூழப்பட்டு, 12000 அடி உயரத்திலுள்ள திபெத்திய தலைநகர் லாஸா போய்ச் சேர்ந்தபோது, நகரத்தைச் சுற்றிலும் மலையுச்சிகளில், வெள்ளை, சிகப்புகள்கனான பல அழகிய ஆலயங்களைக் கண்டோம். சில ஆலயங்கள் மிக உயரமான மலை உச்சிகளிலும் கட்டப்பட்டிருக்கின்றன. காயிநதியை அடைத்தபோது 1930ல் கட்டப்பட்ட இரும்புப் பாலத்தைக் கண்டோம். இதன் ஒவ்வொரு பகுதியும் பிற நாடுகளிலிருந்து கூலிகள்மூலம் இங்கு கொண்டுவரப்பட்டது என்பதை அறிய ஆச்சரியமுற்றோம். நாம் சென்ற அன்று, டலாயிலாமாவின் தரிசனத்திற்காக பல்லாயிர மக்கள் அப்பாலத்தைக் கடந்து செல்வதைக் கண்டோம். அவர்களுடைய பலவர்ண நீண்ட அங்கிகளும், சுற்றுப்புறத்தின் அழகிய காட்சியும் கண்ணுக்கு இனிமையாயிருந்தது. நாமும் அரண்மனையை நோக்கி

விரைந்தோம். திபெத்திய அதிகாரிகள் தமது மனைவி மக்களுடன் குதிரைகள், கோவேறுக்கழுதைகள் மீது சவாரிசெய்தவாறு சாரி சாரியாய் சென்றுகொண்டிருந்தனர்! அரண்மனை நந்தவனத்தை யடைந்தபோது காலை ஏழுமணி முதல் மாலை ஐந்துமணி வரை நடைபெறும் நாடகம் திறந்தவெளியில் நடந்துகொண்டிருந்தது. பகல் போஜனத்திற்கு நமக்கு யாக் பாலும், அரிசிகீர் (பாதாம் கீர் போன்றது) கோதுமை ரொட்டியும் அளிக்கப்பட்டது. பிறகு யாக் பாலாடை கலந்த தேத்தண்ணீர் கொடுக்கப்பட்டது. திபெத்தியர் தேத்தண்ணீர் குடிப்பதில் மிக ஆர்வமுள்ளவர்கள். தினசரி நாற்பது ஐம்பது கோப்பையும் குடித்துவிடுகின்றனர்.

மறுநாள் நாம் லாஸா நகரைச் சுற்றிப் பார்க்கலானோம். எல்லாம் வெள்ளை பூசப்பட்ட கற்கட்டிடங்களே. தெருக்கள் வளைந்து வளைந்து செல்லக்கூடியவை. நகர ஜனத்தொகை எடுக்கப்பட வில்லையாயினும் சுமார் 25ஆயிரம் பேர் உள்ளனர். சுற்று வட்டாரங்களையும் சேர்த்துக்கொண்டால் 50ஆயிரம் என்னலாம். திபெத்தின் மொத்த ஜனத்தொகை 40-லட்சமாகும் அதில் 10-லட்சம்பேர் புத்த பிட்சுக்களே. நகரத்தின் மத்தியில் புத்தபெருமானின் பெரிய ஆலயம் இருக்கிறது. அதன் உப்பரிகைகளும், சுவர்களும் பொன், வெள்ளி வேலைப்பாடமைந்தவை. புத்தபெருமான் சிலையைச் சுற்றி அநேக நெய் அகல் விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. அங்கே அநேக பிட்சுக்கள் கையில் சுழலும் சக்கரங்களை உருட்டியவாறு ஜபித்துக் கொண்டிருந்தனர். தெருக்களில் குப்பை நிறைந்து காணப்படுகிறது. ஆண்டுதோறும் ஒருமுறை அதை அள்ளி வயல்களுக்கு உரமாயிடுவது வழக்கமாம். எரிபொருள் தட்டுப்பாடு அதிகமிருப்பதால் பிணங்களை சுடாமல் அப்படியே மலை உச்சியில் கொண்டுபோய் வைத்துவிடுகின்றனர். பருந்துகளும் மறற பட்சிகளும் அவற்றைக் கொத்தித் தின்றுவிடுகின்றன. 900-அடி உயர மலைமீது டலாய்லாமாவின் குளிர்கால வாசஸ்தலம் இருக்கிறது. அவ்வரண்மனையில் ஆயிரம் அறைகள் கீழ்தளத்திலும், டலாய்லாமாவுக்காக பிரத்தியேக அறைகள் பல மேல் தளத்திலும் இருக்கின்றன. டலாய்லாமா புத்தபெருமானின் வாரிசாகக் கருதப்படுகிறார். ஒரு லாமா இறந்துவிட்டால் வேறொருவரை தேடிக் கண்டுபிடிப்பது வழக்கம். குறிப்பிட்ட அம்சங்களைக்கொண்ட சிறு ஆண்குழந்தைகளையே பொறுக்கி யெடுப்பது வழக்கம்

இன்று 16-பிராயம் கொண்ட டலாய்லாமா நான்கு வயதினரா யிருக்கும்போது பதவிக்குப் பொறுக்கி எடுக்கப்பட்டவர். 15-ம் வயதை அடையும் வரை சர்வ அதிகாரங்கள் மற்ற லாமாக்களிடமே யிருக்கும் அவ் வயதை அடைந்ததும் டலாய்லாமாவுக்கு பூரண அதிகாரங்களும் கிடைத்துவிடுகின்றன. டலாய்லாமா மணம் செய்வதில்லையாதலால் பெண்களைப் பார்க்கவும் அவருக்கு சந்தர்ப்பம் ஏற்டுவதில்லை.

டலாய்லாமாவை சந்திக்கும் அன்று 6-முதல் 12 அங்குலம் நீளம் லோலாக்குகளை அணிந்த இரு பிரபுக்கள் சிகப்பாடை யணிந்து எங்களை அழைத்துச் சென்றனர். அரண்மனை போய்ச் சேர்ந்ததும் இருவர் சங்கு ஊதவாரம்பித்தனர். மணிகள் அடிக்கப்பட்டன. சாம்பிராணி புகை மண்டலத்திடையே டலாய்லாமா சிகப்பு ஆடை யணிந்து சிம்மாசனம் ஒன்றின்மீது அமர்ந்திருந்தார்.

சிங்கசிரசு, அலாரம் அடிக்கும் டைம்பீஸ் (கடியாரம்), குடை முதலியவற்றை காணிக்கையாய்ச் செலுத்தினோம். வணங்கி நின்ற எங்கள் தலைமீது தம் புனித கரத்தால் தொட்டவாறு எங்களை ஆசீர்வதித்து காணிக்கையை ஏற்றுக்கொண்டார். பலதார மணமும், பல புருஷ மணமும் இந்நாட்டினர் செய்துகொள்கின்றனர். ஒரு ஆண் பல மனைவிகளை மணப்பதுபோல், ஒரு பெண் பல புருஷர்களையும் மணந்துகொள்ளலாம். ஒரு பெண் ஒரு ஆடவனை மணந்துகொண்டால் தன் புருஷனின் மற்ற சகோதரர்களுடன் புருஷ சம்பந்தம் வைத்துக் கொள்ளலாம். ஆனால் குழந்தை பிறந்தால் அது பெரிய சகோதரனின் பிள்ளை என்றே கூறுவர். விருந்தாளிக்கு உணவு அளிப்பதொடு, தன் மனைவியையும் அளிப்பதும் இந்நாட்டின் மரியாதை முறைகளில் முக்கியமெனக் கருதப்படுகிறது.

சிறந்த தமிழ்
.... தேசிய வாரப் பத்திரிகை ....
“ஆஸாத்”
பல்லாயிரம் வாசகர்களின் கருத்தைக் கவர்ந்த கொள்கைகள்!
சாதி, சமய, மத, பேதங்களற்ற தத்துவார்த்த அரசியல் போதனைகள், மாபெரும் தலைவர்களின் பூரண அனுதாபத்தையும் ஆசியையும் பெற்றுள்ளது
சந்தா செலுத்தாத அன்பர்கள் தங்கள் சந்தாவை உடனே அனுப்பிவைக்கும்படி
.... கேட்டுக்கொள்கிறோம். ....

ஆஸாத்

தமிழ் தேசீய மாதமிருமுறை பத்திரிகை

மலர் 3 } 11—12—1950 திங்கட்கிழமை { இதழ் 10

தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவர் தேர்தல்

டாக்டர் கோபுவின் போக்கு தவறானதா ?

டாக்டர் கோபு சுமாரான உயரமும் அதற்கேற்றபருமன், மாநிறம், தளரா உறுதிக்கு எடுத்துக்காட்டாக அடர்ந்த புருவம், தீட்சண்யம், மிக்கஅகன்றவிழிகள், எளிய வாழ்க்கையின் சின்னமெனும், தூய்மையான கதருடை, சிந்தனைக்கு இல்லமென நெற்றியுடன் துலங்கும் வதனம், கம்பீரமான தோற்றம் பொருந்தியவர் - தான் வசிக்கும் சுற்றுப்புற மக்கள் அனைவரும் நல்லொழுக்க சீலர்களாய் விளங்கவேண்டும் என்ற ஆவல்படைத்தவர்-என்பவை மட்டும் நாம் அவரைப் போற்றுவதற்கு காரணங்களல்ல. எத்தகைய எதிர்ப்பையும், லட்சியம் செய்யாது சத்தியத்தை நிலைநாட்ட உழைப்பவர் என்பதாலேயே அவரைப் புகழ்கிறோம். லட்சியமே வாழ்வின் நோக்கம் என்றுணர்ந்தவர். லட்சியம் ஈடேறும் வரை தளரா உறுதியுடன் போராடும் வீரர். அவ்வமயம் உலகத்தவரின் ஏசலுக்கு செவிசாய்க்காத உத்தமர். சூழ்நிலை எத்தகையதாயினும் லட்சியப்பாதையில் முன்னேறிச்செல்லும் ஆற்றல் மிக்கவர். மற்றவர் எவ்வழியைப் பின்பற்றுகின்றனர் என்பதில் அவருக்கு எள்ளளவு சிரத்தையுமில்லை. தம் லட்சிய மேகுறிக்கோள் எனக்கொள்பவர்; என்பன போன்ற உயர்ந்த குணங்களைக்கொண்டவர் என்பதாலேயே நாம் அவரை நேசிக்கிறோம். ஆனால்........கண் இரண்டிருப்பினும் சத்திய ஒளியை அறிய முடியாது-சிந்தனா சக்தியை இயற்கை யன்னை நமக்கு அளித்திருந்தும் நியாயம் - அநியாயத்திற்குள்ள வித்தியாசம் புரிந்துகொள்ளாது-சத்தியத்தை சத்தியமென கொண்டாட முடியாது போயிற்றே என்றதுயரம் நம்மை வருத்துகிறது.

கடந்த 6-12-50 புதனன்று தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவர் தேர்தலுக்குச் சென்றோம். திட்டைச் சுப்பிரமணியம் அபேட்சகராய் நிற்கிறார் என்பது தெரியும் ஆனால் அவரை எதிர்ப்பவர் யாரென்பது தேர்தல் அன்றே தெரியவந்தது. ஓட்டுச்சாவடியருகே பலர் பலவிதம் பேசிக்கொண்டிருந்தனர். "சந்தர்ப்பத்திற்கேற்ப நடித்து ஸ்ரீ பிள்ளையுடன்சேர்ந்து ஸ்ரீ சுப்பிரமண்யத்தை தலைமைப் பீடத்தில் அமர்த்த டாக்டர் கோபு முயற்சிக்கிறார்." என்றார் ஒரு நண்பர். கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் உதிக்கலாம். ஆனால் இவர்கள் திட்டை சுப்ரமண்யத்தை ஆதரிப்பது என்பது முடியாத காரியம். தோல்வி நிச்சயம் என்று அறிந்தபிறகே திட்டையை பலியிட முனைந்தனர். என்றார் மற்றொருவர். இன்னொருவரோ "டாக்டர் கோபுவுக்கு எவ்வித லட்சியமும் கிடையாது. அன்று குன்னியூர் ஸ்ரீசாம்பசிவ அய்யருடன் சேர்ந்துகொண்டு ஸ்ரீ நாடிமுத்துப்பிள்ளையை எதிர்த்தார். இன்று பிள்ளையுடன் உறவுகொண்டாடி அய்யரை எதிர்க்கிறார்." என்றார்.

உண்மை என்னவெனில், 16-மாதங்களுக்கு முன் எந்த உண்மை காந்தீய லட்சியம் ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளையை எதிர்க்கக் காரணமாயிருந்ததோ ? அதே லட்சியம் இன்று ஸ்ரீ சாம்பசிவ அய்யரை எதிர்க்கவும் டாக்டர் கோபுவைத் தூண்டியது என்பது நிச்சயம். அன்று ஸ்ரீசுப்பிரமண்யத்தை ஜில்லாபோர்டுதலைவராய்த் தேர்ந்தெடுக்க குன்னியூர் சாம்பசிவ அய்யர் முயன்றார். ஆதலால் அவருடன் ஒத்துழைத்து ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளையை எதிர்க்க நேரிட்டது. இன்று பிள்ளையவர்கள் அதே சுப்பிரமண்யத்தை ஜில்லா காங்கிரஸ் தலைமைப்பதவிக்கு தேர்ந்தெடுக்க முன் வந்துவிட்டதால் அவருடன் சேர்ந்து சாம்பசிவ அய்யரை எதிர்க்க வேண்டியதாயிற்று என்ற உண்மையை யாவருமறிவர். ஒன்றரை மாதத்திற்குமுன் திட்டை சுப்பிரமண்யத்தை காங்கிரஸ்கமிட்டி அங்கத்தினராய் தேர்ந்தெடுக்க உழைத்துக்கொண்டிருந்த டாக்டர் கோபுவை நாம் சந்திக்க நேர்ந்தது, அன்றே ஸ்ரீ சுப்பிரமண்யம் தலைவராய் வரவேண்டுமென தாம் விரும்புவதாய் டாக்டர் தெரிவித்தார். அதற்காகவே எதையும் பொருட்படுத்தாது கடைசிவரை உழைத்தார். ஆகவே தோல்வி நிச்சயமென தெரிந்தபின் திட்டையை பலியிட சதிசெய்தார் என்ற கூற்றை நாம் ஆமோதிக்க முடியாது. ஒரு சமயம் ஜில்லாபோர்டுக்கும் மறுசமயம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கும் தலைவராய்த் தேர்ந்தெடுக்க டாக்டர் கோபு ஏன் முயன்றார்? என்ற கேள்விக்கு காந்திஜியின் ஆத்மாவே தக்க பதிலளிக்கக்கூடியது. இந்திய ஜனாதிபதி பதவிக்கு ஒரு ஹரிஜனப் பெண்ணை தேர்ந்தெடுக்க ஆவல்கொண்டிருந்த காந்திஜியின்ஆத்மா ஜில்லா போர்டு, ஜில்லா காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு ஹரிஜனன் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் சாந்தியடையாதா? அதற்காக உழைத்த டாக்டர் கோபுவை ஆசிர்வதிக்காதா? மேலும் பொதுத் தேர்தலில் காந்திய லட்சியங்களை எடுத்தோதி, ஹரிஜனங்களின் ஆதரவைத் தேட நல்ல சந்தர்ப்பம் கிட்டியிராதா? ஆனால் துரதிருஷ்ட வசமாய் இன்று நம்மிடையே நிலவும் கோஷ்டி மனப்பான்மையின் பயனாய் காந்திஜியின் லட்சியங்களையும் புறக்கணித்து விடுகிறோம். ஆகவே நெருக்கடியான இக்காலத்தில் கோஷ்டிமனப்பான்மையை ஒழித்து தேச நலனுக்கு உகந்த முறையில் ஆக்கவேலையில் ஈடுபட நம் எல்லோருக்கும் சர்வ வல்லமை பொருந்திய ஈசன் அருள்புரிவாராக.

செய்திகள்.

நேபாள புரட்சி

ராணா ஆட்சிக்கு சமாதிகட்ட மக்கள் போர் முரசு.

நேபாளம் நமது அண்டை நாடாயினும், நான்கு ஆண்டுகட்குமுன் அதனுடன் நமக்கு நேரடி தொடர்பின்றி பிரிட்டிஷாரின் ஆதிக்க உறவே இருந்துவந்தமையாலும், அந்நாடு ஹிமயமலைகள் மீது அமைந்திருப்பதாலும், அதை அடையவேண்டிய சாலைகளோ கடக்கமுடியாதனவாயிருப்பதாலும், அதன் உள்நாட்டு நிலைமை மர்மமாகவே இருந்து வந்துள்ளது. நேபாளம் ஆள் பல (Man Power) த்தில் சிறந்ததென உலகமே கொண்டாடுகிறது. அதில் எள்ளளவு சந்தேகமும் இல்லை. நேபாள மக்கள் உலகத்தின் பற்பல பாகங்களிலும் தமது வீரத்தை எடுத்துக் காட்டியுள்ளனர். எந்த நாடும் கிடைக்கப்பெறாத அவ்வீரச் செல்வத்தை தான் உபயோகித்து பலனடையாது ஒரு சில செப்புக் காசுகளுக்காசைப்பட்டு அந்நிய நாடுகளுக்கு அளித்து வந்தது நேபாளத்தின் துரதிருஷ்டமே. எத்தனை நேப்பாள வீரப் புதல்வர்களின் உயிரை இன்று நேபாளம் பிரிட்டிஷாரிடம் விட்டுவைத்துள்ளதோ? இன்றும் தங்கள் புனித ரத்தத்தைச்சிந்தி பிரிட்டிஷ் ஏகாதிபத்திய தளைகளை மலேயாவில் உறுதியளித்துக் கொண்டிருக்கின்றனர் நேபாள கூர்க்க வீரர்கள். வகைமாறியிருப்பினும் இன்றுவரை நேபாளத்தில் அடிமை வியாபாரம் நடைபெற்றே வருகிறது. அன்று தனிப்பட்ட முறையில் நடைபெற்று வந்த அக்கொடுமை இன்று கூட்டுமுறையில் நடைபெறுகிறது. கூட்டங்கூட்டமாக அந்நிய நாடுகளுக்கு சேவைசெய்ய கூர்க்க வீரப் புதல்வர்கள் விற்கப்படுகின்றனர்.

நேபாள அரசியல் மிக விசித்திரமானது. மன்னராயின்றி பிரதமராயிருப்பினும் மன்னரையும் அடக்கி ஆளுகிறார் ராணா. பிரதமரை மன்னர் நியமனம் செய்யமுடியாது. மன்னரைப்போல் பிரதமரும் தலைமுறைத் தலைமுறையாய் வாரிசு முறையில் பதவிக்கு வருகிறார். ஆகவே இன்று பிரதமராயிருக்கும் ராணா குடும்பத்தினருக்கு பிரதமர் பதவி சொந்தமானது. ராஜா பெயரளவுக்கே மன்னராவார். ஆகவே நேபாள ஆட்சியை ராணா சர்க்கார் என்றே கூறவேண்டும். எதேச்சாதிகாரத்தின் பூரண சீர்கேடுகளையும் ராணா நிர்வாகம் பலகாலமாய் கொண்டிருக்கிறது. இருபதாம் நூற்றாண்டிலும் ராணா சர்க்கார் நீடித்திருப்பதற்கு காரணம் நேபாள பூகோள அமைப்பே. இல்லையெனில் இன்றை நவீனமனி ராணா ஆட்சி மட்டுமல்ல எதேச்சாதிகாரத்தையே ஆழப்புதைக்கும் ஆற்றல் மிக்கவன். நேபாளிகளும் மனிதர்களே ஆகையால் உலகமாறுதல்களால் மனமாற்றமடையாதிருக்க முடியாது. நேபாள அரசியல் அறிவாளிகளும் தங்கள் தாய்நாட்டின் அவல நிலைமையையும், ராணா எதேச்சாதிகாரத்தின் கொடுமைகளையும் 1924-லேயே உணர்ந்து, டேராடூனில் கூடி அரசியல் ஸ்தாபனம் ஒன்றை ஸ்தாபித்தனர். தேசியவாதிகளின் இக்கட்சி அரசியல் சீர்திருத்தம் கோரினர். அதன் நிர்வாகிகளில் ராணா குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நபரும் இருந்தார். இந்த ஸ்தாபனத்தார் மன்னருடனும் பேச்சு வார்த்தை நடத்தி அவரது ஒத்துழைப்பையும் பெற்றனர். அன்று முதல் பல முன்னேற்ற தேசீய ஸ்தாபனங்களுக்கு மன்னரின் அனுதாபமும் பொருளுதவியும் கிடைத்து வந்தது. அதனால் பொதுமக்களிடம் மன்னருக்கு நன்மதிப்பேற்பட்டிருப்பினும் ராணா குடும்பத்தாரின் பெரும் விரோதியாகிவிட்டார். மன்னர் அடைந்துவரும் பொதுஜன அபிமானத்தைக்கண்டு அஞ்சிய ராணா அவரைச் சிறைபபடுத்தி கரிஹா அனுப்பிவிட்டு அவருக்குப் பதில் பட்டத்து இளவரசருக்கு முடி சூட்ட நினைத்தார். ஆனால் பொதுஜனங்கள் எதிர்த்ததால் தம் துரோக காரியத்தை ஒத்திப்போட்டுவிட்டார். 1947ல் ஓர் புதிய நிலைமை தோன்றியது. ராணா சர்க்காரின் அட்டூழியங்களை எதிர்த்து போராடிய மக்களுடன் மன்னர் ஒத்துழைத்தார். மாபெறும் எதிர்ப்பைக் கண்ட ராணா பணிந்தார். ஆகவே அரசியல் மசோதாவை தயார் செய்ய தகுதியான ஒருவரை அனுப்புமாறு, பண்டிதநேரு கேட்டுக்கொள்ளப்பட்டார். நேருஜியின் பிரதிநிதி ஸ்ரீ பிரகாஷ் காட்மண்டு சென்று அரசியல் மசோதா தயார் செய்தார். ராணா சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டி அம்மசோதாவை ஆராயலாயிற்று. "நேபாளத்தை சுயநிர்ணய உரிமைகொண்ட பல மாகாணங்களாய் நேபாளத்தை பிரிக்கவும், இரு சட்டசபைகள் அமைக்கப்பட வேண்டுமென்றும், பொதுவாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படினும் மேல்சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ராணா குடும்பத்தினரே அங்கத்தினராயிருக்கவேண்டுமென்றும்," ஸ்ரீ பிரகாஷ் அத்திட்டத்தில் கூறியிருந்தார். மேலும் கீழ் சபையினர் அனைவரும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அத்திட்டம் கூறியது. மன்னர் அத்திட்டத்தை பூரணமாய் ஆதரித்தார். ஆனால் கீழ்சபையிலும் தமக்கு பூரண பெரும்பான்மையிருக்கவேண்டுமென ராணா குடும்பத்தினர் வற்புறுத்தியதால் அத்திட்டங்கள் அமுலாக்கப்படவில்லை.

பிரதமரும் அவற்றை ஆதரித்தாராயினும், ராணாக்களின் எதிர்ப்பே வெற்றியடைந்தது. நிலைமைமோசமடைந்ததால் 1948-ல் பிரதமர் தமது பதவியை ராஜிநாமா செய்ய நேர்ந்தது. மறுபக்கம் பொதுஜன போராட்டம் வலுவடைந்து வந்தது. இந்தியா, இலங்கை, பர்மா முதலிய நாட்டினர் அடைந்த வெற்றிகளால் நேப்பாளி மக்கள் உற்சாகமடைந்து தங்கள் குறைகளுக்கும் முடிவுகட்ட உறுதி கொண்டிருந்தனர். 1950-மார்ச்சுமாதம் கல்கத்தாவில் கூடிய மகாநாட்டில்

நேபாள அரசியல் ஸ்தாபனங்கள் யாவற்றையும் கலைத்துவிட்டு, ஒரே ஸ்தாபனமாக்கப்படவேண்டும் என்று நிர்மாணிக்கப்பட்டு, அத் தீர்மானம் வெற்றி கரமாய் நிறைவேற்றப்பட்டது. அதனல் விடுதலை இயக்கம் புது உற்சாகத்துடன் காரியத்திலிறங்கியது 1950, செப் 26-ல் ஹர்கோனியா வென்றன்டத்தில் (நேப்பாளம் - பீஹார் எல்லையிலுள்ள இடம்) ஓர் இரகசியக்கூட்டம் நடந்தது அதில் தசரா கொண்டாட்டத்தின்போது போராட்டம் ஆரம்பிக்கப் படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனல் அக்கூட்டத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன் பிரதமர் ஒரு நபரைக் கைதுசெய்தார். அந்நபர் தனது குற்றத்தையொப்புக் கொண்டதுடன் போராட்டத்தையும் வெளியிட்டுவிட்டான். பிரதமர் அந்நபரை கைதுசெய்யப்பட்டதை அவன் அறிவித்தவற்றையில் இரகசியமாய் கவனிக்கலானர். மேலும் பாதுகாப்புக்களை பலப்படுத்துவதுடன் முக்கியமானவர்களை கைதுசெய்தும் வந்தார். நேபாள காங்கிரசின் சில முக்கிய பிரமுகர்களுடன் மன்னர்குடும்பத்தினர் இருவரும், ராணு குடும்பத்தினர் பலரும் கைது செய்யப்பட்டனர். ஆகவே ரகசியதிட்டம் வெற்றிபெறவில்லை. மன்னர் முதலிலிருந்தே சந்தேகிக்கப்பட்டுவந்தார். சதி திட்டம் தெரிந்ததும் அவர் கடுமையாய்க் கண்காணிக்கப் படலானர். மூன்று மாதத்திற் கொருமுறை மட்டும் அரண்மனையை விட்டு வெளியேறலாமென மன்னருக்கு தடை விதிக்கப்பட்டதென்றல் அவர் எத்தகை கண்காணிப்பிற்காளாகி யிருந்தார் என்று தெரிகிறது. அச்சலுகையே மன்னருக்கு பெரும்பாக்கியமாகிவிட்டது. 9-நவம்பர் அன்று அதிகாலையில் மன்னர் தமது குடும்பத்தினருடன் அரண்மனையை விட்டு உல்லாசப்பிரயாணம் போவதாய் வெளிவந்தார் அச்சாலை இந்திய தூதராலயம் இருக்கும் சாலையே. தூதராலயத்தை சமீபித்ததும் மன்னர் தமது மோட்டாரை இந்திய ஸ்தானிகராலயத்திற்குள் செலுத்த உத்திரவிட்டார். திடீரென உள்ளே புகுந்த மன்னரைக்கண்டு இந்திய ஸ்தானிகர் திகைத்துப் போய்விட்டார். மன்னரின் நோக்கம் என்ன? வென்பதை முதலில் உணராத அவர் சற்றுநேரம் பிரமித்து நின்று விட்டார். மன்னர் தம்வாயாலேயே தஞ்சம் கோரிய போது, சுய உணர்வுபெற்ற நம் ஸ்தானிகர், சர்வதேச சட்டப்பிரகாரம் அவருக்கு அபயமளித்து, புதுடில்லி அனுப்பிவைத்தார். இன்று நேபாள மன்னர் புது டில்லியில் உள்ள ஹைதராபாத் மாளிகையில்நம்விருந்தினரா யிருக்கிருர்.

மன்னர் இந்திய ஸ்தானிகரிடம் தஞ்சம் புகுந்து விட்டார் என்பதை அறிந்த பிரதமர் அரண்மனையை முற்றுகையிட்டு உள்ளே புகுந்தபோது, தவறியிருந்து விட்ட மன்னரின் பேரனை (மூன்று வயதுள்ளவன்) பட்டமேற்றினர் மன்னர் இந்தியாவில் அகதிபோ லிருக்கையில் மூன்று வயது பாலகனை நேபாளமன்னர் என்று கூறி அகில உலகு அங்கீகாரம்பெற பிரதமர் முயன்றுவருகிருர். ஆனல் இன்றுவரை அக்காரியம் வெற்றிபெறவில்லை. நிலைமையைப் பார்த்தால் இனியும் முடியாது என்றே தோன்றுகிறது. மன்னர் வெளியேறியதும் நேபாளப் புரட்சிபோராட்டம் ஆரம்பமாகிவிட்டது நேபாள காங்கிரஸ்படைகள் ஒன்பது இடங்களிலிருந்து தாக்கின அடையாளம் தெரியாத விமானங்களிலிருந்து துண்டு பிரசுரங்கள் வீசப்படுகின்றன. சில இடங்களை புரட்சிப் படைகள் கைப்பற்றியுள்ளன. சர்க்கார் படைவீரர்கள் பலர் புரட்சியாளருடன் சேர்ந்துகொண்டனர் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வாலிபர்கள் போராட முன் வருகின்றனர்

புரட்சிப்படைகள் காட்டுமண்டு (நேபாளத்தலைநகர்) வை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாய் செய்திகள் வருகின்றன. சர்க்கார் படைகள் செய்யும் அக்கிரமங்கள் அத்துமீறிவிட்டன. கண்களைக்குத்தி கொல்லவும் அஞ்சவில்லை. அக்காதகர்கள் ராணுசர்க்கார் புரட்சிப்போராட்டத்தை இனி அடக்க முடியாது என்றே தோன்றுகிறது திமிர்பிடித்த ராணு சர்க்காருக்கு சாவு சமீபித்து விட்டது நேபாளம் பூரண விடுதலை பெற்று உண்மை மன்னர் பெயரளவில் பட்டத்திலிருப்பினும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களால் ஆளப்படும் நன்னுள் வெகு சமீபத்திலேயே இருக்கிறது என்பது திண்ணம். நமது அண்டைவீட்டில் நடைபெறு புரட்சிப் போராட்டம் பூரண வெற்றி பெறவேண்டும் என்றே விரும்புகிருேம். ஆனல் அதன் உள்நாட்டு விஷயங்களில் இந்திய சர்க்கார் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறது புரட்சியாளர் இந்திய பூமியை தளமாய் உபயோகிக்காது பீகார் சர்க்கார் கண்காணித்து வருகிறது. புரட்சியாளர் வெற்றியடைய வேண்டும் என்று நினைப்பினும் நம் நாட்டினின்றும் நமது அண்டைநாட்டுக்கு அபாய நேராவண்ணம் பார்த்துக்கொள்வது நமது கடமையாகும்.

கோஷ்டிப்பூசலின் கோரத் தாண்டவம்

அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், சமூகம் முதலிய காரியங்களின் முன்னேற்றமே லட்சியமென பாடுபடுபவர்கள் முடிவில் வெற்றியடைவர் என்பதை சரித்திரம் எடுத்துக் காட்டுகிறது. மேலும் காந்திஜியின் தலைமையின்கீழ் இந்திய தேசிய காங்கிரஸ் மஹாசபை, பல்வேறு இனம், ஜாதி, கொள்கைகளைக் கொண்டதாயினும், போராட்டத்தில் வெற்றி வாகை சூடி, இந்திய நாட்டிற்கு விடுதலை யளித்ததும் லட்சியத்தின் உன்னதத் தன்மை மட்டுமல்ல, போராட்ட வீரர்களிடையே நிலவிய ஒற்றுமைதான் முக்கிய காரணமென்பதை யாவரு மறிந்த உண்மை. ஆனல் எத்தகை சாதாரண காரியத்திலும், ஒற்றுமை யில்லாவிடில் எடுத்த காரியத்தில் வெற்றிபெற முடியாது என்பது நிச்சயம்.

கடந்த ஆண்டு தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தேர்தலில் போட்டியிட்டவர்களின் நண்பர் கூ. அ அப்துல் மஜித் சாயபும் ஒருவர். முப்பது ஆண்டுகளுக்கு முன் 5000 ரூபாய் நன்கொடை பணமுடிப்பை காந்திஜிக்கு அளித்து, அம்மஹானின் புகழுரையையும் பெற்றவர். "இந்நற்கருமம் தென்னாட்டிற்கல்லாது வடநாட்டிற்கும் வழிகாட்டும் செயலாகும்" என்று காந்திஜி அவரைப் புகழ்ந்து கூறினர். பலகாலம் பந்துலு அய்யருடன் தலைவராகவும், காரியதரிசியாயுமிருந்து அதே பாபநாசத்தில் சேவை செய்த உத்தமர். அம்மட்டுமல்ல, வ. உ. சிதம்பரம் பிள்ளை, ஸ்ரீசத்தியமூர்த்தி, சேலம் விஜயராகவாச்சாரியார், வரதராஜுலு நாயுடு, மௌலானா அபுல்கலாம் ஆசாத், ராஜாஜி முதலிய தலைவர்களுடன் நெருங்கிப் பழகி, அநேக காலம் தேசத் தொண்டு புரிந்தவர். ஆனால் சிறை செல்லும் பாக்கியம் அவருக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மையே. ஆயினும் தஞ்சை காங்கிரஸ்காரர்களின் எல்லா கோஷ்டிகளும் அவருடைய திறமையை ஒருமித்து ஆமோதித்தன. ஆயினும் கோஷ்டி மனப்பான்மை காரணமாக அவர் தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை. கோஸ்டி மனப்பான்மை வளர்ந்தால் தகுதி, திறமை முதலிய உயர்குணங்களுக்கு எவ்வித மதிப்பும் இருக்கமுடியாது. ஆகவே அதுமே லட்சியப் பாதையை விட்டுத் திருப்பி, தவறான மார்க்கத்தில் செலுத்தி பெரும் அழிவைத் தேடிக் கொடுக்கக் கூடியதென்பதை உணர்ந்து, அச்சாபக்கேட்டை ஆழப்புதைக்க யாவரும் முனைந்துவிடுவோமாக.

பாகிஸ்தானில் இன்னொரு அரசியல் ஸ்தாபனம்.

முஸ்லிம் லீகுக்கு எதிர்ப்பு வலுக்கிறது.

லாஹூர் நவ. 11:—நேற்று இங்குகூடிய முஸ்லிம் பிரமுகர்கள், நெடுநேர ஆலோசனைக்குப்பின் "ஆஸாத் பாகிஸ்தான்" என்ற அரசியல் ஸ்தாபனம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்தனர். எதிர்க்கட்சிகளின் எண்ணிக்கை இத்துடன் ஆறாகும்.

இப்புதுக் கட்சியின் நிர்வாகஸ்தர்கள் (Convener) ஐக்கிய பஞ்சாப் காங்கிரஸின் மாஜி தலைவரான மியான் இப்திகாருத்தீனும், மேற்கு பஞ்சாப் (பாகிஸ்தான்) மந்திரி சபையில் நிதிமந்திரியாயிருந்தவரும், பாகிஸ்தான் தோன்றுவதற்கு ஜின்னாவின் வலதுகரமாயிருந்து பாடுபட்டவருமான சர்தார் ஷௌகத் ஹயாத்கானும் ஆவார்கள். இவ்விருவரையும் சமீபத்தில் பாக் அரசியல் நிர்ணயசபைப் பார்லிமெண்டரி முஸ்லிம்லீக் கட்சியினர் சமீபத்தில் வெளியேற்றினர் என்பது நேயர்களுக்கு நினைவிருக்கும்.

வரும் தேர்தலின்போது முஸ்லிம்லீக் அபேட்சகர்களை எதிர்க்க ஐக்கிய அணி ஒன்றை ஏற்படுத்த ஜின்னா முஸ்லிம் லீக் பிரமுகர் மியான் இப்திகார் ஹுஸைன் மம்தோதுடன், புதுஸ்தாபனத் தலைவர்கள் நடத்திய சம்பாஷணைகள் முறிந்தபின்பே, மேற்கூறிய ஸ்தாபனம் அமைக்கப்பட்டது.

இப்புதுக் கட்சியின் காரியதிட்டத்தில் கீழ்கண்ட மூன்று முக்கிய ஷரத்துக்கள் காணப்படுகின்றன.

1. கூடுமானவரை சமீபத்தில் பாகிஸ்தான் காமன்வெல்த்திலிருந்து வெளியேறி, பூரண சுதந்திர ஜனநாயக நாடென பிரகடனம் செய்ய வேண்டும்.

2. எல்லா ஆசிய நாடுகள், அடிமைப்பட்டுக் கிடக்கும் மற்ற உலகநாடுகள் முதலியவற்றுடன் நேச உறவு நிலைநிறுத்துவது,

3. அந்நிய தொழிற்சாலைகள், பாங்குகள், வெளியேறியோரின் சொத்துக்கள் முதலியவற்றை சர்க்கார் உடமையாக்குவது.

ஆகிய மூன்று முக்கியலட்சியங்களுக்காக போராட இன்னும் ஒரு எதிர்கட்சி பாகிஸ்தானில் தோன்றி முஸ்லிம் லீகுக்கு எதிர்ப்பு வலுத்துவருவதைக் காட்டுகிறது.

சந்தாதார்கள்

விளம்பரம் கொடுக்கும் அன்பர்கள்,

ஏஜெண்டுகளுக்கு.

சீரிய சிந்தனைகள், உயரிய அரசியல் கருத்துக்களை அள்ளிக் கொடுப்பதில் நிகரற்று விளங்குவதைப் போலவே, "ஆஸாத்" எடுப்பாக கண்ணைக் கவரும் அமைப்புடன் வெளியிடப்பட வேண்டுமென்பது நம் அவா. சொந்தமாக ஒரு அச்சுக்கூடம் இல்லாமல் அவ்வித மாறுதல்கள் சாத்தியமில்லை. ஆகையால் அச்சுக்கூட ஏற்பாடுகள் பூர்த்தியாகும் வரை "ஆஸாத்" மாதமிருமுறைதான் தங்களை சந்திக்குமென்பதைதெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்,
"ஆஸாத்" கும்பகோணம்.

பாக் சர்க்கார் கட்சி (முஸ்லிம்லீக்) க்கு ஐக்கிய எதிர்ப்பு

சர்வ கட்சி மஹா நாட்டில் ஆலோசனை.

லாஹுர், நவ. 23—பாகிஸ்தான் எதிர்கட்சிகளின் மஹாநாடு இன்று ஜமாஅதெ இஸ்லாமியா தலைவர், மௌலானா அபுல் அஃலா மௌதூதி தலைமையின்கீழ் நடந்தது. மேற்கு பஞ்சாபில் வருங்காலத்தில் நடைபெறபோகும் பொதுத் தேர்தலில் முஸ்லீம்லீகை எதிர்க்க ஐக்கிய முன்னணி ஸ்தாபனம் அமைப்பதே மஹாநாட்டின் நோக்கம் என்று பலரும் எடுத்துக் கூறினர்.

பாக் அரசியல் நிர்ணயசபை அமைத்த அடிப்படை உரிமைக் கமிட்டி சமர்ப்பித்த யாதாஸ்தை, சர்வகட்சிகளும் ஒற்றுமையுடன் எதிர் நடவடிக்கை எடுப்பதைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

மஹாநாட்டில் பொது ஜன முஸ்லீம் லீக் தலைவர் பீர்மாங்கி சாஹிப், ஜின்னு முஸ்லீம் லீக் பிரமுகர் மியான் அப்துல் பாரி, ஆஜாத் பாக் கட்சி அமைப்பாளர் மிஸ்டர் மஹ்மூத் அலி முதலியோர் கலந்துகொண்டனர். சர்வமஹாநாட்டில்கூடும் தலைவர் கர்க்கார் கட்சி (முஸ்லீம் லீக்)யை வரும் தேர்தலின்போது எதிர்க்க ஒரு ஐக்கிய முன்னணியை அமைக்க உருப்படியான திட்டம் ஒன்றை சமர்ப்பிப்பர் என்று ஸ்தல ஆங்கிலப் பத்திரிகை எழுதுகிறது. மேற்கூறிய எதிர்கட்சி பார்லிமெண்டரி போர்டு ஒன்று அமைக்கப்பட்டு விட்டதென்று ஜின்னு முஸ்லீம்லீக் தலைவர் கான் இப்திகார் ஹுஸைன் மம்தோத் கூறினர் என்று அப்பத்திரிகை கூறுகிறது.

கான் மம்தோத் இப்போது கராச்சியி லிருக்கிறார். ஜின்னு சகோதரி மிஸ் பாத்திமா ஜின்னுவை அவர் இரு முறை சந்தித்தார் என்று கூறப்படுகிறது.

லாஹுர் முஸ்லிம் லீகர்கள் ராஜிஞமா!

பஞ்சாப் மாகாண முஸ்லீம்லீக் மாஜி தலைவரும், பிரதம மந்திரியுமான கான் இப்திகார் ஹுஸைன்கான் ராஜீஞமா செய்தபிறகு, மாஜி பார்லிமெண்டரி காரியதரிசி சௌத்ரி நஸீருத்தீன், பெண்கள் முஸ்லீம்லீக் கூட்டுக் காரியதரிசி பேகம் பர்ரூக் ஹுஸைன், கோஜர்ன்வாலா முஸ்லீம்லீக் பிரமுகர் சௌத்ரி இர்ஷாதுல்லா முதலியோர் (பாக்) முஸ்லீம் லீகினின்றும் ராஜீஞமா செய்து வெளியேறிவிட்டனர்.

பாக் பொது மக்களிடம் முஸ்லீம்லீக் இழந்து வரும் அபிமானம் எத்தகையதென்பதை லாஹுர் வார்டில் நடைபெற்ற முஸ்லீம்லீக் மஹாநாடே எடுத்துக் காட்டாகும். அன்று இரண்டாயிரம் முஸ்லீம்லீகர்கள், ஸ்தாபனத்தினின்றும் ராஜிஞமா செய்வதாய் அறிவித்தனர். ஆரம்ப முஸ்லீம்லீகின் இக்கூட்டம், முபாரக் ஹவேலி, சௌக் நவ்வாப் சாஹிபில், டாக் முஹம்மத் ஹுஸைன் அக்தர், ஆறும் வார்டு முஸ்லீம்லீக் தலைவர், தலைமையில் நடைபெற்றது.

ஜின்னு முஸ்லிம்லீக்

சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஜின்னு முஸ்லிம்லீக் என்ற ஸ்தாபனம் வெளியிட்டிருக்கும் காரிய திட்டத்தைப் பார்த்தால் ஜமாஅதே இஸ்லாமியா (பாகிஸ்தான்) செய்த பிரசாரத்தின் பயனே என்று கூருமலிருக்க முடியாது. காரிய திட்டமாவது:—

1. இஸ்லாமிய அரசியலை அமுலாக்குவது.
2. குரானிய நெறியில் அரசியல் திட்டம் தயாரித்தல்.
3. சர்வதேச அரங்கில் குறிப்பிட்ட ஒரு கோஷ்டியுடன் மட்டும் உறவு வைத்துக்கொள்வதை எதிர்ப்பது.
4. பாகிஸ்தானை முன்னேறச் செய்வது.
5. பேச்சு, பத்திரிகை சுதந்தரத்தை நிலைநாட்டுவது.
6. பிரஜைகள் யாவருக்கும் உணவு, குடியிருப்பு வசதி செய்து கொடுப்பது.
7. இஸ்லாமிய நெறிமுறையை பின்பற்ற மக்களை தூண்டுவது.
8. ஜக்காத்து (இஸ்லாமிய முறைப்படி யளிக்கப்படும் சொத்துவரி) அடிப்படையில் பொது மக்கள் நிதி ஏற்படுத்துதல்.

மேற்கூறிய திட்டத்துடன் தோன்றியிருக்கும் ஜின்னு முஸ்லிம்லீக், தான் காணும் கனவை நினைவாக்குமா என்பதை காலப்போக்கே நிச்சயப்படுத்தக்கூடியது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும்,
விபரங்களுக்கும்
கீழ்காணும் விலாசத்திற்கு எழுதுங்கள்.

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்,

29 MAY 1950 MADRAS

சமீபக்கிழக்கு நாடுகளில் விழிப்பு.

அமெரிக்க சட்ட ஆலோசகர் மார்ஸ் அறிக்கை.

வாஷிங்டன் நவம் 17-தேதி அமெரிக்க சர்க்கார் சட்ட ஆலோசகரும் சர்வதேச வக்கீல்கள் சங்கத்தில் அங்கத்தினருமான ஜார்ஜ் எம். மார்ஸ் சமீபத்தில் அமெரிக்க சர்க்காரின் ஆக்ஞைப்படி துர்க்கி, ஈரான், இராக், ஜாம் (சிரியா) லெபனுன், எகிப்து, கிரீஸ்முதலிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பி வந்திருக்கிறார். இன்று பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:—

சமீப கிழக்கு நாடுகள், பொருளாதாரம், உற்பத்தி, முதலிய துறைகளில் உள்ள குறைகளை சீர்படுத்த ஒற்றுமையுடனும் ஊக்கத்துடனும் உழைக்கின்றன. இக்காரணத்தாலேயே அவர்கள் அடைந்துள்ள முன்னேற்றம் பெருமைபடத்தக்கதே,

மேற் கூறியவற்றை விவரிக்கையில் அவர் கூறியதாவது;— கல்வி, அரசியல், ஜனநாயக நிர்வாகம், சுகாதாரம் முதலிய துறைகளில் அடையும் முன்னேற்றமே ஒருதேசத்தை முன்னேற்றத்தக்கது. இன்று சமீப கிழக்கு நாடுகள் அத்துறைகளில் தக்க கவனம் செலுத்தி வருகின்றன. பொதுஜன நன்மைக்கு உகந்த திட்டங்களில் கவனம் செலுத்தி அவற்றை நிறைவேற்றிவைக்கும் ஆற்றல் மிக்க தலைவர்களே அந்நாடுகளின் முன்னேற்றத்திற்கு உண்மைக்காரணமாகையால் அவர்களை நாம் எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்.

தொடர்ந்து கூறுகையில்:— முதல் மகா யுத்தத்தின்போதும் அதன் பிறகும், அந்நாடுகளுக்கு வாழ்வா தாழ்வா என்று கூறும்விதம் சோதனை மிகுந்த காலமாயிருந்தது. ஆனால் தேசபக்தி மிகுந்த தலைவர்களின் இடையரு உழைப்பும், ஊக்கமும், மக்களுக்குப் புத்துயிரூட்டி கிழக்கில் மட்டுமின்றி அகில உலகும் வியக்கும் அளவு முன்னேறி, உயர்வின் உச்சியை அடையச் செய்துவிட்டனர். இன்று துருக்கி ஒற்றுமையும், பலமும் கொண்டிருப்பதுடன் ராணுவத் துறையில் மிக உயர்வு பெற்றுள்ளது.

எகிப்திய பெண்கள் ஆண்களுக்கு சமமாய் நின்று தேசிய சமுக முன்னேற்றத்திற்காக உழைக்கின்றனர். வாழ்க்கையில் சகல துறைகளிலும் சீரிய தொண்டு புரிகின்றனர். எகிப்திய தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்கு பெண்களே காரணம். கல்வி சுகாதாரம் அடைந்துவரும் முற்போக்குக்கும் அவர் காரணம். எல்லாவற்றிற்கும் சிகரமென பெண்வர்க்கத்தின் உயர்வுக்காக அவர்கள் புரியும்தொண்டு பெருமை படத்தக்கதாகும் என்று கூறினார் மிஸ்டர் மார்ஸ்.

கண்டியூர்
கிராம ரேஷனில் நெல்லுக்கு பதிலாக அரிசி கொடுக்கும்படி
எ. தாமோதரன் வேண்டுகோள்.

தற்போது கிராம ரேஷன் கடைகளில் அரிசிக்கு பதிலாக நெல் கொடுக்கிறார்கள், அப்படி கொடுப்பதால் பெருவாரியான கிராம ஏழை ஜனங்கள் சொல்லொணு கஷ்டப்படுகிறார்கள். உதாரணமாக எங்கள் கண்டியூரில் உள்ள உணவுபங்கீட்டுக் கடையில் சுமார் 2-மாத காலத்துக்கு மேலாக அரிசிக்கு பதில் நெல் கொடுக்கிறார்கள். எங்கள் கிராமத்தில் வாழும் ஜனங்களில் பெரும்பாலோர் விவசாயிகள், வெற்றிலை கொடிக்கால் தொழிலாளர்கள் நெசவாளர்கள் இன்னும் மற்றும் அனேக ஏழை ஜனங்கள் இருக்கிறார்கள் இந்த நிலையில் கூடி தொழிலாளர்கள் காலை 6-மணியிலிருந்து மாலை 5-மணி வரையில் வேலை செய்கிறார்கள். வேலைசெய்து அவரவர் எஜமானிடத்தில் கூலி வாங்க மணி 6 அல்லது 7-ஆகிறது. பிறகு 7-மணிக்கு மேல் போய் ரேஷன் கடையில் அரிசிக்கு பதில் நெல்லை வாங்கி என்ன செய்வது. அப்படி நெல்வாங்கும்போது ஏழை விவசாயின் மனம் என்ன நினைக்கும் என்பதை நம் மாகாண மந்திரிகள் ஒல்வொருவரும் நெஞ்சில் கைவைத்துப் பார்க்கும்படி கோறுகிறேன். நான் இப்படி சொல்லுவதால் அரசாங்கத் துவேஷிஎன்று நினைக்கவேண்டாம். காங்கிரஸ்காரன் என்ற முறையில் கடமையை சொல்லுகிறேன். குறிப்பாக உழைக்கும் தொழிலாளி உதிரக்கண்ணீர் வடித்தால் அந்த நாடுசெழிக்காது. க்ஷேமமடையாது. சர்க்கார் அவர்கள் ஆகையால் ஏழைஅழுதகண்ணீர் கூறிய வாளை ஒக்கும் என்ற பழமொழியை மனதில் கொண்டு இனிமேல் வரும் மழை காலங்களில் கிராம ஜனங்கள் கஷ்டப்படாமல் அவர்களின் சௌகரியத்தை முன்னிட்டு கிராம ரேஷனில் நெல்லுக்கு பதிலாக அரிசி கொடுக்கும்படி கோறுகிறேன்.

தங்கள் அன்புள்ள ஊழியன்,
ஏ. தாமோதரன், கண்டியூர், தஞ்சை ஜில்லா.
6—11—50.

உங்கள் வியாபாரம் விருத்தியடைய
"ஆஸாத்"
பத்திரிகையில் விளம்பரம் செய்யுங்கள்
ஏஜண்டுகளில்லாத நகரங்களுக்கு
"ஆஸாத்"
விற்பனை ஏஜண்டுகள் தேவை!

லண்டனில் இஸ்லாமிய பாடசாலை

லண்டன் நவ. 16 :—லண்டன்வாழ் இஸ்லாமிய குழந்தைகள் இஸ்லாமிய சமூக மதாச்சார போதனைகள் இனி பயில்வதற்குத் தக்க சாதகமாக ஓர் பாடசாலை ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. மத போதனைகளுடன் அரபுலிபியில் குரான் பயிலவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்றுவரை பலர் மதாச்சார கோட்பாடுகளும், அரபுமொழியும் அறவே அறிந்திராத ஆங்கிலோ முஸ்லிம்களுக்கு நற்காலம் பிறந்து விட்டதென்றே கூறவேண்டும்.

இப்பாடசாலை சமீபத்திலேயே ஆரம்பமாயிற்று குளிர்காலத்தில், திட்டமான முறையில் மாணவர்கள் சுலபமாய் கற்க வசதியாய் டைரக்டர் ஷைக் அலி அப்துல்காதர் சில சுலபமான முறைகளைத் தயாரித்திருக்கிறார். மேலும் வயது வந்த முஸ்லிம்களுக்கு அரபி கற்கவும், முஸ்லிம் அல்லாதாரிடையே இஸ்லாமிய போதனைகளைப் பரவச் செய்யவும் கிழக்கத்திய கலாச்சாரத்தை எடுத்துக் கூறவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எல்லைபுற காந்தியை உடனே விடுதலை செய்!

வலங்கைமானில் கண்டனக் கூட்டம், தீர்மானங்கள் நிறைவேற்றி கராச்சிக்கும், டில்லிக்கும் அனுப்பப்பட்டன,

வலங்கைமான் நவ 26

தேசிய ஊழியர்கள், தேசிய முஸ்லிம் வாலிப சங்கத்தார் ஆதரவில், இன்று மாலை 3-மணிக்குக் கண்டன ஊர்வலம் – வாசகங்கள் எழுதிய பெரிய போர்டுகளைத் தொண்டர்கள் தாங்கி முன்னே செல்ல, தேசிய கோஷங்களைக் கூறிக்கொண்டு மக்கள் பின்வர நகர முழுவதையும் சுற்றிவந்து "காந்திஜி' நினைவு நிலைய" மைதானத்தில் கூடினர்.

மாலை 4-மணிக்கு சேலத்திலிருந்து வந்துள்ள "மாடர்ன் தியேட்டர்ஸ்" பாடகர் கே. வி. ராமசாமி அவர்களின் தேசிய கீதத்தோடு திரு பி. கே ஏ. முகம்மது ஜக்கரியா தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது.

"இந்திய விடுதலைக்காக காந்திஜியோடு சகல தியாகத்தையும் செய்ததின் மூலம் உழைத்து பாடுபட்டவர் கான் அப்துல் கபார்கான். எவ்வளவோ உயிர்த் தியாகத்தின் மூலம் வாங்கிய சுதந்திரத்திற்குப் பின், தனக்கு சுதந்திரம் இல்லாமல் பாகிஸ்தான் சிறையில் கபார்கான் வாடிக்கொண்டிருக்கிறார் என்பது—இந்தியர் அனைவருக்கும் பெரும் துக்கம் தரக்கூடிய நிகழ்ச்சியாகும்

மேலும் எதேச்சாதிகாரத்தோடு பாக்கிஸ்தான் தர்பார் நடத்துவது என்பது அதன் அடிப்படை கொள்கைக்கே கேடு விளைவிப்பதாக இருக்கிறது — புறம்பாகவும் உள்ளது. "முஸ்லிம் ஆட்சி" என்று கூறிக்கொண்டு அடக்குமுறையைக் கையாண்டு — மக்களைக் கொடுமைப்படுத்துவதென்பது இந்தியர்களால் சகிக்கமுடியாததாகும்.

இப்பொழுது கபார்கானுடைய நிலைமை மிகவும் மோசமாயிருக்கிறது என்று அறிகிறோம். இந்தச் சந்தர்ப்பத்திலாவது அவரை விடுதலை செய்வதே பாக்கிஸ்தானின் கடமையாகும்.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள அனைவரும் இவ்வாறு கண்டனக்கூட்டம் நடத்தி கராச்சிக்கும், டில்லிக்கும் அனுப்பவேண்டியது அவசியம்" என்று தொண்டர் ஜைனுல்லாபிதீன் அவர்கள் பேசினார்கள்.

அடுத்தபடியாக பிரபல தென்னாட்டுத் தலைவர் அப்துல் சத்தார் பிரேரேபித்த கீழ்க்கண்டத் தீர்மானங்கள் ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

1. எல்லைப்புற காந்தி சகோதரர்களை விசாரணையின்றி அநியாயமாக பாக்கிஸ்தான் சர்க்கார் கைது செய்து வைத்திருப்பதை இக்கூட்டம் பலமாக கண்டிப்பதோடு, அவரை உடனே விடுதலை செய்யவேண்டும் என்று பாக்கிஸ்தானைக் கேட்டுக்கொள்கிறது.

2. இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட காந்தி சகோதரர்களை, இந்தியா விடுதலை பெற்றபிறகு சிறையில் வாடுவதைக் கண்டு இக்கூட்டம் வருந்துவதோடு அவர்களை விடுதலை செய்யவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி இந்தியப் பிரதமர் நேருஜியைக் கேட்டுக்கொள்கிறது.

இத்தீர்மானங்களை கராச்சிக்கும், டில்லிக்கும் தந்தி மூலம் அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

கடைசியாக பிரபல நியூஸ் ஏஜண்டு பி. கே. இ. அப்துல்லா வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

(ந-நி)

இந்தியா வட எல்லை.
நேருஜி பேருரை

விண்மீன்களுடன் உறவாடும் போல் தோன்றும் பனிபடர்ந்த சிகரங்களைக்கொண்ட உயர்ந்த இமயம் இந்தியாவின் வட வெல்லையாயமைந்திருக்கிறது. தன் பாதுகாவலன் இமயமே என இந்தியத்தாய் என்றென்றும் போற்றிவந்திருக்கிறாள்;

“இந்தியநாட்டின் மதிச்சுவர்போல அமைந்திருக்கும் இமயமே உன்னைக் கட்டியணைக்க விண்ணும் வளைந்துள்ளது போல் தோன்றுகிறது.”

“புறக்கண்களுக்கு நீ ஒரு மலைத்தொடரே எனினும் நம்முடைய பாதுகாவலனும், இந்தியாவின் மதிலும் நீயே”

“அகில உலகிலும் உயரமானதும் வானளாவப் பீரமாய் நிற்கும் மாமலை, நமது சிப்பாயும், பாதுகாவலனுமாகும்.” என்று பலவிதம் இந்திய கவிஞர்கள் போற்றும் இமயமலையே நமது வடஎல்லை.

மேற்கூறிய கவிஞர்களின் கருத்து, இந்திய மக்களிடையே நெடுங்காலமாய் நிலவிவருவதாகும். ஒருவேளை இம்மலைத்தொடரின் உயரமோ, அல்லது சரித்காலமுதல் இந்நாட்டின்மீது படையெடுத்தவர்கள் பெரும்பாலும் வடமேற்கிலிருந்தே படையெடுத்தார்கள் வடக்கிலிருந்தல்ல என்றகாரணமோ? இந்தியமக்கள் மேற்கூறிய நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் இந்நவீன காலத்திலும் அந்த நம்பிக்கை னவப்பதல் பலனுண்டா?

இந்திய வடஎல்லை அனைத்தையும் இம்மலைத்தொடரே ஆக்கிரமித்திருப்பது உண்மையே. அதன் 146 சிகரங்களும் அகில உலகு உயர்ந்த சிகரங்களுடன் சேர்ந்தவை. அவற்றில் 74 சிகரங்கள் 24-ஆயிரம் அடி, 48 சிகரங்கள் 25-ஆயிரம் அடி. 16 சிகரங்கள் 26.ஆயிரம் அடி உயரமானவை என்பதும் உண்மைதான். இத்தகைய இயற்கை பாதுகாப்பு அரணாய் அமைந்துள்ள இமயத்திலும் இந்தியா முதல் திபெத் வரை பல பள்ளத்தாக்கு வழிகள் அம்மலைத்தொடரின் மார்பைப் பிளந்து செல்வதுபோல் அமைந்திருக்கின்றன. தினசரி வர்த்தகக் கூட்டங்கள் போக்கு வரத்திற்கு உதவும் விய்யா (லாடக்) லாஸா மார்க்கம் அறியாதார் எவர்? பீலிபீத், காட்கோதாம், கோட்துவார் முதலிய விடங்களிலிருந்தும் திபெத் போக வழிகள் இருக்கின்றன. கைலாசமலை, கிதார்நாத், பத்ரிநாத் மான்ஸரோவர் ஏரி முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செல்பவர்கள் அவ்வழிகளில் ஆண்டுதோறும் பிரயாணம் செய்கின்றனர். இதைத்தவிர ராக்ஸா (பீஹார்) விலிருந்து காட்மண்டு (நேபாள) வுக்கும் அங்கிருந்து திபெத்திற்கும் நல்ல வழியுண்டு. மேலும் பூடான்–சிக்கிம் சமஸ்தானங்களிடையே உள்ள சம்பீ பள்ளத்தாக்கு அகலமாயும் சுலபமாய் பிரயாணம் செய்யத்தக்கதாயும் இருக்கிறது. ஆகவே இமயத்தைக் கடந்து வரமுடியாது என்று பொதுவாய் நம்பப்படுவது தவறாகும்.

இந்திய வடஎல்லை இத்துணைகாலம்வரை அபாயம் பொருந்தியதாயிருக்கவில்லை என்பதற்குக் காரணம், திபெத்போன்ற ஒரு சமாதானம் விரும்பும் நாடு வடக்கில் இருந்ததே எனலாம். நான்கு புறமும் உயர்ந்த மலைகளால் சூழப்பட்ட ஒரு சதுரமான பீடபூமி பாலையே திபெத். இது சுமார் 15-ஆயிரம் அடி உயரத்திலிருக்கிறது. இதற்கு தெற்கில் இமயமலையும் ஹிந்துக்களால் புனிதமானதெனக் கொண்டாடப்படுவதும் பதினாயிரம் அடி உயரத்திலிருப்பவையுமான ஏரிகளும் உள்ளன. இயற்கையமைப்பு, மக்களின் சுபாவம் முதலியவற்றின் காரணமாக திபெத் சமாதான மனப்பான்மை படைத்த நாடாகும். மேலும் திபெத் இந்தியாவுக்கிடையில், கஷ்மீர், டேடிகர்வால், சிக்கிம் முதலிய சமஸ்தானங்களும், நேபாளம், பூடான் போன்ற சுயேச்சை நாடுகளும் இருக்கின்றன. ஆனால் திபெத் – இப்தியா நேரடியாக சந்திப்பது பஞ்சாபில் காங்டாஜில்லா, உ. பி. தில் கிஸ்மத் கமாயூன், அஸ்ஸாமில் பிரம்மபுத்திரா பாயும் பிரதேசம் முதலியவிடங்களே. ஆயினும் நாம் முதலில் கூறியதுபோல் கடந்தகாலத்தில் வடஎல்லை பத்திரமாயிருந்ததற்கு திபெத்தின் சாத்வீகமும் சமாதான மனப்பான்மையுமே. இன்று திபெத்தை செஞ்சீனர் ஆக்கிரமித்திருக்கையில், நேபாளத்தில் புரட்சி மேலோங்கி குழப்பமான நிலைமை ஏற்பட்டிருக்குங் காலத்தில் இமயமலையின் உயரத்திலோ, திபெத்தின் சாத்வீகத்தின்மீதோ பாதுகாப்பு உணர்ச்சியை சுமத்தி வாளாயிருக்க முடியாது. இக்காரணத்தாலேயே பார்லிமெண்டில் நவம்பர் 20ல் பேசுகையில் நம் பிரதமர் நேருஜி, “லாடக் முதல் நேபாளம் வரையிலும், பூடான் முதல் ஐராவதி, கீல்வீன் நதிதீரம் வரையில் இந்தியா – திபெத் எல்லை என்றும் அமைந்தே இருந்துவந்துள்ளது.

(தொடரும்)

டாக்டர். ஏ. மதுரம் சன்ஸ்,

60 YEARS NAME AND FAME

GURU

குழந்தைகளுக்கு
கைகண்ட மருந்துகள்

1. கஸ்தூரி மாத்திரை
2. கோரோஜனை மாத்திரை
3. ஹெல்த் மாத்திரை
4 பால் உப்பு
5. வேப்பெண்ணை தைலம்
6 குரு தைலம்
7. குரு பாலர் டானிக்
8. கக்குவான் மருந்து

குரு தைலம்
மகா சஞ்சீவி.

குரு மருந்துசாலை, : திருச்சிறைப்பள்ளி.

குரு பல்பொடி சகல தந்த ரோகங்கள் தீரும்.

தந்தி விலாசம்:— 'கோகுல்' ஸ்தாபிதம் 1909 டெலிபோன் நெ 57

டி.எஸ்.ஆர்.அண்.கோ.

கும்பகோணம்.

பிராஞ்சு:— மதராஸ் & மன்னார்குடி

சந்தனாதித்தைலம், அரைக்கீரை விதைத்தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும் குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

மற்றும்

கோகுல் ஊதுவத்திகள், பல காய்கரி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, வாசனைப்பாக்கு, வாசனை சுண்ணாம்பு, அரகஜா முதலிய இதர சாமான்களும் கிடைக்கும்.

பீடி சக்கரவர்த்தி

RAMSAIT BEEDI

ராம்சேட் பீடி

க.பி.சொக்கலால்

முக்கூடல்

க.பி.சொக்கலால் ராம்சேட் பீடி முக்கூடல்

Printed by V. Jayaram at his Sri Rama (Power) Printing Works, 38, Sarangapani East Vadamboki St, Kmn.
Edited and Published by Moulana Abdul Hakeem, 4, Kumbeswaran South, Kumbakonam.